செ.வெ.எண்.29 நாள். 17.9.2011

**நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் சமூக நலத்துறையின் சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டத்தின்கீழ் 250 நபர்களுக்கு ரூ.88.25 லட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவியும் மற்றும் திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1 கிலோ தங்கத்தினையும் வழங்கினார்.**

நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் சமூக நலத்துறையின் சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டத்தின்கீழ் 250 நபர்களுக்கு ரூ.88.25 லட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவியும் மற்றும் திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1 கிலோ தங்கத்தினையும் வழங்கி பேசியதாவது:



17.9.2011 - நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் சமூக நலத்துறையின் சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ரூ.50,000-த்திற்கான காசோலை மற்றும் திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கினார். அருகில் மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் ஆகியோர் உள்ளனர்.

பெண்கள் புகுந்த வீட்டிற்கு தங்கம் இல்லாமல் செல்லக்கூடாது என்று கருதிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழைப்பெண்களின் திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் தங்கம் வழங்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி இன்று 250 நபர்களுக்கு தலா 4 கிராம் தங்கம் வீதம் 1 கிலோ தங்கம் வழங்கப்படுகிறது. திருமண உதவித்தொகையினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். பட்டம் மற்றும் பட்டயப்படித்தவர்களுக்கு திருமண நிதியுதவியாக ரூ.25,000த்திலிருந்து ரூ.50,000 –மாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஏழை மக்களின் வாழ்வு வளம் பெற அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெற்றவர்களுக்கு சுமை இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு அரசின் சார்பில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இலவசம் என்றால் அதை வாங்குவோர்களிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்படும் என்ற காரணத்தினால் அரசின் சார்பில் வழங்கப்படும் பொருட்கள் அனைத்திற்கும் விலையில்லா பொருட்கள் என பெயரிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய பெண்களின் திருமணத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி வழங்கி இக்குடும்பங்களில் விளக்கேற்றி வைத்துள்ளார். இவ்வாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் பேசினார்.

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள் பேசியதாவது: கிராமத்தில் வறுமை காரணமாக திருமணம் தள்ளிப்போகும் நிலை இருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருமண நிதியுதவி திட்டம் மற்றும் திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் இனி இத்தகைய நிலை ஏற்படப்போவதில்லை. சென்ற ஆட்சியில் திருமண நிதியுதவித்திட்டம் முறையாக செயல்படுத்தப்படவில்லை. தற்போது இத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு மேலும் திருமண நிதியுதவி தொகையும் உயர்த்தி வழங்கப்படுகிறது. திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டம் எந்த நாட்டிலும் இல்லை. ஏழை எளிய மக்களை முன்னேற்றத்திற்கு கொண்டுவர அரசு பல்வேறு திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு படித்த 103 நபர்களுக்கு தலா ரூ.50,000 வீதம், ரூ.51.50 லட்சம் மதிப்பிலான காசோலைகள் மற்றும் தலா 4 கிராம் தங்கம் வீதம் 412 கிராம் தங்கம், 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு படித்த 147 நபர்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.36.75 லட்சம் மதிப்பிலான காசோலைகள் தலா 4 கிராம் தங்கம் வீதம் 588 கிராம் தங்கம் என மொத்தம் 250 நபர்களுக்கு ரூ.88.25 இலட்சம் மதிப்பிலான காசோலைகள் மற்றும் தலா 4 கிராம் தங்கம் வீதம் 1 கிலோ தங்கமும், டாம்கோ திட்டத்தின்கீழ் 6 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்த 78 நபர்களுக்கு ரூ.19.50 லட்சம் மதிப்பிலான கடனுதவி தொகையும், கல்லூரியில் படிக்கும் 15 மாணவ மாணவியர்களுக்கு ரூ.27.30 லட்சம் கல்விக்கடன் பெறுவதற்கான ஆணைகளையும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ச.சா.குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திரு.பாரிவேல், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ஆர்.சாந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திருமதி. சரோஜா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.